
எதிரிக்கு எதிரி!
லயன்
காமிக்ஸ்
ரூ-3·50

# ஹாட் - லைன்!

லயன் ரசிகர்களே,

வணக்கம். "இன்ஸ்பெக்டர் டேஞ்சரின் க்ரைம் க்விஸ்" போட்டியில் ஏராளமான வாசகர்கள் பங்கேற்றிருந்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. சரியான விடையெழுதி வெற்றி பெற்ற வாசகர்கள் விபரம் ம் பக்கத்தில் உள்ளது!



ஆர்ச்சி குட்வின்

இனி இந்த மாதக் கதைக்கு வருவோமா? ஏஜெண்ட் காரி கனின் பழைய எதிரியான "டாக்டர் செவன்" மிகவும் வித்தியாச மான வில்லனுக உங்களை சந்திக்கப் போகிறார்! அது மட்டுமல்ல - இந்த சாகஸத்திற்கு வரையப்பட்டுள்ள சித்திரங்கள் மிக மிக தத்ரூபமாக இருப்பதை நீங்கள் பார்க்கலாம். நீண்ட காலமாக காரிகன் கதைகளுக்குப் படம் வரைந்து கொண்டிருந்தத Archie Goodwin எனும் அமெரிக்க ஓவியரின் படைப்பு இது! சமீப கால மாக வேறு ஒரு ஓவியர் (George Evans) காரிகன் கதைகளுக்குப் படம் வரைந்து வருகிறார்! இரண்டிற்குமிடையே உள்ள வித்தி யாசத்தைப் பாருங்களேன்!

அடுத்த மாதம் மின்னல் படையினரின் "முகமில்லா மாயாவி" எனும் முழு நீள அதிரடிக் கதை வரயிருக்கிறது! வழக் கமான பெரிய சைஸிலேயே இதழ் வெளிவரும். அத்தோடு பொங்கல் பரிசாக இன்னொரு புக்கும் கலர் இணைப்பாகக் கிடைக்கும்! படிக்கத் தவறாதீர்கள்!

லயன் 100 வது இதழின் அறிவிப்பு எப்போது என்றும் என்னென்ன கதைகள் போடலாம் - போடக் கூடாது என்றும் ஏராளமான வாசகர்கள் எழுதிய வண்ணம் உள்ளனர். உங்கள் அனைவரின் கருத்துக்களுக்கும் நிச்சயம் மதிப்பளிக்கப்படும்! இதழின் விலை ரூ. 20/- என்பது முடிவாகி விட்டது. கதை Selection இன்னும் முடியவில்லை. கண்டிப்பாக அடுத்த இதழில் அறிவிப்பு வரும்!



ஜார்ஜ் இவான்ஸ்

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அதுவரை - happy reading!

அன்புடன்,

S. விஜயன்




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும்
வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன், முகவரி · பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
தபால் பெட்டி எண் : 374, சிவகாசி - 626 123. போன் : 20649.
அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.
வெளியீடு எண் : 94



பசிபிக் தீவுகளுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த அந்த விமானத்தில் புதிய பயணிகள் ஏறி அமர்ந்தனர்... அவர்களுடன் ரகசிய ஏஜெண்ட் காரிகனும்...
உங்களிடம் பரம ரகசியமான கேஸ் தரப்பட்டுள்ளது என நினைக்கிறேன் மிஸ்டர் காரிகன்! உங்களுக்கு அடுத்துள்ள 'சீட்' காலியாகத்தான் உள்ளது என்று எடுத்துக் கொண்டு...
ஃபைலை நானும் படித்து முடித்து விடுகிறேன்!
கார்லா...? கார்லா கோபக்! நான் காண்பது கனவில்லையே?
அணு சக்தியினை உருவாக்கும் மூலப் பொருட்கள் கப்பல்களோடு மொத்த மாய் மறைந்து வரும் இந்த விவகாரத் தில் ஒரு கடல் ஆராய்ச்சி நிபுணரின் உதவி கிடைப்பது என் அதிர்ஷ்டமே!
யெஸ்! நாம் மீண்டும் ஓர் அணியாகச் செயல்படும் வேலை வந்து விட்டது காரிகன்!
இந்தப் பிரச் னையில் என்னுடைய விஞ்ஞான ஆற்றல் உதவியாக இருக்குமென்று அரசாங்கம் நினைக்கிறது.
நமது எதிரிகள் திறமைசாலிகள் கார்லா...


அணு ஆராய்ச்சி விஞ்ஞானிகளும், அணு சக்தி தயாரிக்க உதவும் மூலப் பொருட்களை சுமந்து செல்லும் கப்பல்களும் மாயமாய் மறைகின்றன!
நீங்கள் சொல்வதைப் பார்த்தால் நமது பழைய எதிரி டாக்டர் செவனின் கைவரிசையாக இருக்குமோ என்ற சந்தேகம் வருகிறது!
''ஆனால் டாக்டர் செவன் கடுமை யான பாதுகாப்புடன் ஜெயில் ஆஸ்பத்திரியில் கிடக்கிறானே...''
அப்படியே இருக்கிறான்...! கோமா நிலையில் மாற்றம் எதுவும் இல்லை!
பசிபிக் தீவுகள் வந்தவுடன் காரிகனும் கார்லாவும் தயாராக இருந்த ஹெலிகாப்டருக்கு மாறினார்...
இதுவரை தடயமே இல்லாமல் கப்பல்கள் மறைந்துள்ளன!
ஆனாலும் இந்தத் தடவை... யாரோ கோட்டை விட்டு விட்டார்கள்!
இந்த சரக்குக் கப்பல் மிக மோசமாக தகர்க்கப்பட்டுள்ளது! வழக்கமான சூழ்நிலையில் தடயமின்றி மூழ்கியிருக்கும். ஆனால் - எதிர்பாரா வேகக் காற்றுகள் கப்பலை திசை திருப்பி இந்தப் பாறைகளில் தரை தட்டி நிற்கச் செய்து விட்டன!


விரைவில் உடைந்து விடும் போலத் தெரிகிறது!
கப்பல் மூழ்குவதற்கு முன் நீங்களும் டாக்டர் கார்லாவும் பத்திரமாக அங்கு போய் இறங்க வேண்டும்! ஆனால் அதிக நேரம் எடுத்துக் கொள்ளாதீர்கள்..!
இந்தத் தடவை கப்பல் மாயமாய் மறைய வில்லை... ஆனால் அதன் மாலுமிகளும் அதில் ஏற்றப் பட்டிருந்த அணுசக்தி மூலப் பொருட்களும் சுத்தமாய் காணோம்?
காரிகனும் கார்லாவும் ஹெலி காப்டரிலிருந்து கப்பலுக்கு இறக்கப்பட்டனர்..
சற்றைக் கெல்லாம் -
மாலுமிகளுக்கோ கப்பலுக்கோ என்ன நடந்தது என்றறிய ஒரு தடயம் கூட இல்லையே!
அதே நேரம் சண்டையோ, கைகலப்போ நடந்ததற்கான அடையாளமும் இல்லை!
... கப்பலில் பல இடங்களில் இவை கிடக்கின்றன... பார்ப்பதற்கு சாதாரண கடற் தாவரம் மாதிரித் தான் தெரிகிறது.... ஆனால்....
அதை நான் பார்க்கலாமா, காரிகன்?


காரிகனுக்கும், டாக்டர் கார்லாவுக்கும் சிக்னல் கொடுப்பது தான் நல்லது... கப்பல் மூழ்குவதற்கு அதிக நேரம் ஆகாது!
எதையோ கண்டு பிடித்து விட்டது போலத் தெரிகிறது...
கடல் அலைகளோடு அடித்து வரப் பட்ட தாவரம் என்று தான் நினைத் தேன். ஆனால்... அதை எடுத்துப் பார்த்த போது...
இது சாதாரண கடற்தாவரம் அல்ல என்பது உறுதி
ஆழ்கடலின் படுகை யில் வளரக் கூடிய அரிய தாவரம் இது!
அப்படியானால் கடல் அலைகள் இவற்றை இங்கு கொண்டு வந்து சேர்க்கவில்லை...!



... யாரோ இதைக் கப்பலுக்குக் கொண்டு வந்துள்ளனர்.
யாரோவா?! இந்தத் தாவரம் முளைக்கும் ஆழ்கடலில் மனுஷனுக்கு என்ன வேலை?
காரிகன் ஹெலிகாப்டருக்கு கொடுத்தார்...
சரியான சமயத்திற்கு வெளியேறி விட்டீர்கள் காரிகன்.. கப்பல் மூழ்குகிறது பாருங்கள்!
ஆனால் இதை நாங்கள் மீட்டு வந்துள்ளோம். கடலடியில் வளரும் அரிய தாவரம் இது!
இதற்கும் காணாமல் போன அணு விஞ்ஞானிகளுக்கும் என்ன சம்பந்தம்?
அதைக் கண்டு பிடிக்கத்தான் நானும், டாக்டர் கார்லாவும் வந்திருக்கிறோம்!
தாமதமின்றி அமெரிக்கா திரும்பிய இருவரும் தங்களுடைய அறிக்கையை சமர்ப்பித்தனர் -
உன்னுடைய திட்டம் திகைக்க வைக்கிறது காரிகன்...!


நம்மை எதிர் கொண்டிருக்கும் பிரச்சனை லேசுப்பட்டதில்லை சீஃப்! கப்பலில் காணப்பட்ட கடற் தாவரங்கள் அதை உறுதி செய்கின்றன!
மிக, மிக ஆழமான கடற்பகுதியிலிருந்து தான் இவை வந்திருக் கின்றன என்பதால் -
- கப்பல்கள் மறைவதற்கு கடல் பூதங்கள்தான் காரணம் என்று சொல்லப் போகிறாயா?
பூதமோ - பிசாசோ... அதை மடக்குவதற்கு வித்தியாசமான தூண்டில் போட்டாக வேண்டும்!
காரிகன்; உன்னுடைய 'திட்டத்திற்கு' அங்கீகாரம் கிடைத்து நீயும் டாக்டர் கார்லாவும் கோட்டை விட்டு விட்டீர்கள் என்றால் அரசாங்கம் அசடு வழிய வேண்டி வரும்! வேறு யாரையாவது தூண்டில் புழுவாகக் கொண்டு செல்லக் கூடாதா..?!
விஞ்ஞானிகளையும், அணுசக்தி மூலப் பொருட்களையும் கடத்திச் சென்றது யாராக இருந்தாலும் சரி - இந்த முறை கவனக் குறைவாக கப்பலை விட்டுச் சென்றுள்ளனர்!
அவர்களுடைய முயற்சி முடிவடையும் தருவாய் நெருங்கி விட்டதால் தான் இந்த கவனக் குறைவு என சந்தேகிக்கிறேன்!
அப்படியிருக்கும் பட்சத்தில் "அவர்களை" மீண்டும் செயலில் இறங்கச் செய்வது கடினம்..! "மிகப் பெரிய" ஜாக்பாட் கிடைக்கும் என்று இருந்தால் மட்டுமே "அவர்கள்" திரும்ப வருவார்கள்!
ஆனால் நீ தேர்ந்தெடுத்துள்ளது உலகிலேயே மிகவும் பயங்கரமான ஆசாமியை!


அப்படிப்பட்ட ஆசாமிக்கு ஆசைப் பட்டு எதிரிகள் மீண்டும் தலையைக் காட்டுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு!
காரிகனின் திட்டம் வெற்றி பெற வேண்டுமானால் நாம் போடும் தூண்டிலில் ''கவர்ச்சியான'' புழு இருந்தாக வேண்டும்!
என் திட்டம் ஆபத்தானது தான்! ஆனால் இப்போதுள்ள நிலைக்கு வேறு வழியில்லை!
விரைவில் சிறைச்சாலை ஆஸ்பத்திரிக்கு வந்தனர்...
இவரை இங்கிருந்து வெளியே கொண்டு போகப் போகிறீர்களா...? கோமாவில் இருப்பதைத் தவிர மற்ற படிக்கு உடல் நிலை சீராகவே உள்ளது! ஆனால் ஏன் கப்பல் மூலம் கொண்டு செல்கிறீர்கள்?
சீஃப் உற்சாகத்தில் துள்ளிக் குதிக்கா விட்டாலும் கூட நமது திட்டத்திற்கு அனுமதியளித்து விட்டாரே!
வேறு வழியில்லாமல் தான் சம்மதித்தார்!


... இதில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டு பிடிப்பதற்காக கொஞ்சம் 'ரிஸ்க்' எடுப்பதில் தப்பில்லை!
வேடிக்கை என்னவென்றால்... எவனைப் பிடித்து சிறையில் அடைப்பதற்காக என் உயிரையே பணயம் வைத்தேனோ - அவனை நானே இப்போது வெளியே கொண்டு வரப் போகிறேன்!
மேலதிகாரிகளின் அரை மனதான ஒப்புதலுடன் காரிகனும் கார்லாவும் புறப்பட்டனர்...!
MARINE RESEARCH INSTITUTE
நமக்குத் தேவையானது இங்கே தயாராகியிருக்கும் காரிகன்!
நமது நண்பரையும் விடுதலை செய்ய ஏற்பாடு செய்து விட்டனர்..!
''...ஆக நமது திட்டப்படியே எல்லாம் நடக்கிறது!''
கோமாவில் கிடக்கும் ஆசாமிக்கு இவ்வளவு பாதுகாப்பா...?
அவனுடைய சரித்திரத்தைப் படித்துப்பார்! இன்னும் அதிகம் வேண்டுமென்பாய்!
17 PCT
POLICE


அதோ பாருங்கள் காரிகன்! முன்பு ஒரு முறை நாம் பயன்படுத்திய நீர் மூழ்கிக் கப்பல் தயாராக உள்ளது!
இந்தத் தடவையும் நமக்கு வெற்றியைத் தேடித் தரும் என்று நம்புவோம்!
ஹலோ கண்ட்ரோல் ரூம்... நாங்கள் புறப்பட்டு விட்டதாக காரிகனுக்குத் தெரியப்படுத்துங்கள்!
POLICE
நீர் மூழ்கியை கிளப்பும் வேலையை கார்லாவிடம் விட்டு விட்டு, காரிகன் அடுத்த இலக்கை நோக்கி நகர்ந்தார்...
உங்களையும் உங்களுடைய ''தூண்டில் புழு''வையும் ஏற்றிச் செல்லப் போகும் கப்பல் இது தான்... விஷயத்தை நாசுக்காக வெளியே கசியச் செய்திருக்கிறோம்!
சேர வேண்டியவர்கள் காதிற்குப் போய்ச் சேர்ந்தால் நிச்சயம் நம்மைத் தேடி வருவார்கள்!


பார்த்தால் ஆட்டுக் குட்டியாட்டம் கிடக்கிறார்!
கோமா நிலையில் கூட இவனைப் பார்த்தால் நடுங்குகிறது எனக்கு!
டாக்டர் செவனை ஏற்றிக் கொண்டு ஆம்புலன்ஸ் பாதுகாப்புடன் துறைமுகத்தை அடைந்தது!
டாக்டர் செவன் சாத்தானின் மறு உருவம்! அவனை என்னுடைய அறையில் கொண்டு போய் படுக்க வையுங்கள்!
உங்களுடன் பயணம் செய்யப் போகும் தோஸ்த் வந்து விட்டார் காரிகன்... கிழவனை உங்கள் கையில் தள்ளிவிட்ட பிறகு தான் எங்களுக்கு நிம்மதி!
கோமாவில் இருந்தாலும் கூட.... அவனைப் பார்த்தாலே திகிலடிக்கிறது!
விரைவில் கடலில் பயணமானது கப்பல்!
...இனமறியாத மர்மத்தை நோக்கி!
போரடித்ததால் மேல் தளத்தில் போய் நின்று கொண்டிருந்தார் காரிகன்!
டாக்டர் செவன் என்னுடைய கேபினில் இருக்கும் போது வேறு எங்கும் நான் போகக் கூடாது..


விநோதமான இந்த கோமா நிலையில் அவன் இருக்கும் வரை அவனோடு பேச்சுக் கொடுக்கக் கூட முடியாது!
ஆசாமி துடிப்பாக இருந்தா னென்றால் நிச்சயம் இப்படி போரடிக்காது!
ஆனால் கோமா நிலையில் இருப்பதாகக் கருதப்பட்ட அந்த மனிதனின் கண்கள் திடீரென்று திறந்து கொண்டன!
கண்களிலோ குரோதமும் ஆத்திரமும் கொப்பளித்தன!
கப்பலுக்கும் நிலப்பகுதிக்கும் இடை யிலான தூரம் அதிக ரித்துக் கொண்டே போகப் போக காரிகன் குட்டி போட்ட பூனை போலத் தவிக்க ஆரம்பித்தார்!
காத்துக் கிடப்பது பெரிய சோதனையாக இருக்கிறது!
ஆனால் அறைக்குள்... டாக்டர் செவன் தனது கோமா நிலையில் இருந்து எழுந்தான்...
...தான் இருக்கும் இடத்தை ஆராய்ந்த அவன் முகத்தில் புன்சிரிப்பு!


டலைப் பார்த்த படியே காவல் நின்ற காரிகனுக்கு...
...ரூமுக்குள் கோமா நிலையில் கிடந்த டாக்டர் செவன் முழு குணமடைந்து முன்பு இருந்த அதே நிலைக்கு மாறியிருந்த விஷயம் தெரியாது!
முதலில் உடைகளை மாற்ற வேண்டும்... ஆஸ்பத்திரியில் அணிவித்துள்ள உடை இனி இடைஞ்சலாக இருக்கும்!
... முதல் வேலையாக காரிகனை வெளியே தள்ளி விட்டு கப்பலைக் கைப்பற்ற வேண்டும்!
காரிகன் தொடர்ந்து கடலைக் கவனித்துக் கொண்டிருந்த போது...
பெரும்பாலான கப்பல்கள் மாயமாய் மறைந்த பகுதிக்குள் நுழைந்து விட்டோம்!
நம்முடைய தூண்டில் புழுவினைக் கண்டு அவர்கள் வராவிட்டால்... அவர்களுக்கு டாக்டர் செவன் தேவை இல்லையென்றல்லவா அர்த்தம்...?


திடீரென்று காரிகனின் நரம்புகளைச் செயலிழக்கச் செய்யும் படியாக ஒரு உடும்புப் பிடி
உள்ளே வா காரிகன்! உன்னுடைய சாவு குறித்து முக்கியமான விஷயம் பேச வேண்டும்!
எதிர்த்துப் போராட முடியாத நிலையில் காரிகன் அறைக்குள் இழுத்துச் செல்லப்பட்டார்!
மறைந்திருந்து உன்னைக் கொல்வது எனது ஸ்டைல் அல்ல காரிகன்! அதை நான் விரும்பவுமில்லை!
இருந்தும் இங்குள்ள நிலைமைக்கு இது அவசியமாகிறது! மற்ற நேரங்களில் உன்னை மடக்குவது சுலபமான காரியமல்ல என்பது தெரியும்!
...நான் எழுந்தது போல் கோமா நிலையில் இருந்து எந்த ஒரு சாதாரண மனிதனும் எழ முடியாது!
மனக் கட்டுப் பாட்டின் மூலம் நான் உடலைக் கட்டுப் படுத்தினேன்! கோமா என்பது, நானே உண்டாக்கியது தான்.. உன்னை கொல்ல நினைத்த எனது இலக்கை அடையத்தான்!
டாக்டர் செவனின் கூர்மையான நகங்கள் காரிகனின் கழுத்தை நெறித்த போது...
உன்னிடம் உள்ள கோளாறு என்ன தெரியுமா டாக்டர்?


ஆனால் இரு நீண்ட கால எதிரிகளுமே மோதத் தயாராகும் முன்பு...
...கப்பலை பயங்கர மானதொரு அதிர்வு தாக்கியது!
உன் திறமையைப் பறை சாற்ற நீ வீணடிக்கும் நேரத்தில் எதிராளி தப்பிக்க அவகாசம் கிடைத்து விடுகிறது!
அது உன்னைக் காப்பாற்றாது!
மோதல் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது!
கப்பலைத் திருப்புங்கள்! இந்தப் பகுதிக்குள் கப்பல்கள் மாயமாய் மறைந்த கதையைக் கேட்ட பின்பும்... அந்த மூடு பனிக்குள்ளே கப்பலை செலுத்த மாட்டேன்!
காப்டன் .. இனி அதற்கு நேரமில்லை..!
பனி மூட்டம் கப்பல் முழுவதையும் ஆக்கிரமித்தது!
எ - என்ன நடக்கிறது?


வெட்டுண்ட மரம் போல் டாக்டர் செவன் சாய்ந்தார்!
இது பனி மூட்டம் அல்ல...! ஏதோ ஒரு வகை வாயு!
நிசப்தமாய் நீண்ட நேரம் ஓடியது..
சற்றைக் கெல்லாம் கப்பல் முழுவதும் சலனமற்றுப் போனது.
கடல் பரப்பை கிழித்துக் கொண்டு ஒரு கரிய சப்மரைன் வெளியே வந்தது!
நீங்கள் இருவரும் டாக்டர் செவன் இருக்கும் காபினைக் கண்டு பிடியுங்கள்! மற்ற அனைவரும் இந்தக் கப்பலை மூழ்கடிக்கும் வேலையைச் செய்வோம்!


இரு விநோத உருவங்கள் காரிகனின் அறைக்குள் நுழைந்தன...
சண்டை போட்டுக் கொண்டிருந்திருக்கிறார்கள்!
டாக்டர் செவனின் உடல் நிலை குறித்து நமக்கு வந்த தகவலுடன் இது பொருந்த வில்லையே... அந்த ஏஜெண்டையும் கடத்திக் கொண்டு போவோம்! அவனிடம் கேள்விகள் கேட்க மிஸ்டர் நெப்டியூன் விரும்புவார்!
கப்பலின் அடியில் ஓட்டை போட்டாகி விட்டது... சீக்கிரத்தில் மூழ்கிவிடும். மாலுமிகளை என்ன செய்ய?
நமக்கு மேற்கொண்டு கொத் தடிமைகள் தேவையில்லை. நாம் யாருக்காக வந்தோமோ அவர்களை மட்டும் கொண்டு செல்வோம்!
மயங்கிக் கிடந்த காரிகனையும், டாக்டர் செவனையும் சுமந்து கொண்டு அந்த அதிசய வாகனம் ஆழ்கடலை நோக்கிப் பாய்ந்து சென்றது...



கடலின் மிக ஆழமான பகுதியை எட்டியது அந்தக் கலம்!
ஆனால் அதே நேரம் கார்லாவை சுமந்து கொண்டு மற்றொரு நீர்மூழ்கிக் கப்பல்... பின் தொடர்ந்தது!
இவ்வளவு நேரம் காரிகனின் கப்பலைப் பின் தொடர்ந்ததற்கு இப்போது பயன் கிடைத்து விட்டது!
அட்டென்ஷன்! அமெரிக்க கடல் ரோந்துப் படை? ஓட்டை விழுந்த கப்பலில் கிடக்கும் மாலுமிகளை மீட்கக் கிளம்புங்கள்!
திட்டப்படி நான் மர்ம எதிரிகளைப் பின் தொடர்கிறேன்!
தன் மீதும், டாக்டர் செவன் மீதும் காரிகன் பொருத்திய கருவி அருமையான 'சிக்னல்' கொடுத்து வருகிறது!
கடத்தல் ஆசாமிகள் இவ்வளவு ஆழமான பகுதிக்கு ஏன் செல்கிறார்கள் என்பது தான் இப்போதுள்ள கேள்வி?


கார்லா தொடர்ந்து அந்த விநோத கலத்தைப் பின் தொடர்ந்தான்..
கடலுக்கு அடியில் இருந்ததொரு மலைப் பகுதிக்குள் நுழைந்தது அந்தக் கலம்....
..அங்கே காத்திருந்ததோ நம்பற் கரியதொரு காட்சி!
பிரமாண்டமானதொரு ஆழ்கடல் நகரத்திற்குள் நுழைந்தது சப்மரைன்!
சற்றைக் கெல்லாம் -
மிஸ்டர் நெப்டியூன், பணியை முடித்து விட்டு நமது வேட்டைக் கலம் திரும்பி விட்டது!
Jules Verne
TWENTY THOUSAND LEAGUES UNDER THE SEA
மருத்துவக் குழுவினர் டாக்டர் செவனைக் கவனிக்கட்டும்! ரகசிய ஏஜெண்ட் காரிகனை நானே பார்த்துக் கொள்கிறேன்!


காரிகனை தூக்கிக் கொண்டு வந்தனர்...
...அதில் இது தான் மிகப் பொருத்தமானது!
அவன் காலை ஊன்றி நிற்கும்படி தூக்கி நிறுத்துங்கள்! நமது 'நாக் அவுட்' வாயுவை சுவாசித்தவர்களை சுயநினைவுக்குக் கொண்டு வர பல யுத்திகள் உள்ளன...
ஸ்லாப்
நெப்டியூன் சாம்ராஜ்யம் உன்னை வரவேற் கிறது. காரிகன்!
'நாக் அவுட்' வாயுவின் ஆதிக்கத்தி லிருந்து நீ போதுமான அளவு தெளிந்து விட்டாய்!
நீ - நீ.. யார்...?
நான்தான் மிஸ்டர் நெப்டியூன்! உன்னைச் சுற்றியுள்ள அதிசயங்களை சிருஷ்டித்த பிரம்மா நானே! இந்த மண்டலத்தை ஆட்டிப் படைப் பவனும் நான் தான்!


பண்டைய ரோமாபுரிக் கடல் தெய்வத்தின் பெயரை எடுத்துக் கொண்ட நான் எனது சாம்ராஜ்யத்தை உயிரைப் போல நேசிக்கிறேன்! ஆனால் நீயோ, நான் நேசிப்பதை அழிக்க முற்படுபவன்!
ஆழ்கடலில் அரசாளும் திறமை யுள்ள எனக்கு, உனது சிறுபிள்ளைத் தனமான சதித்திட்டத்தை இனம் கண்டு கொள்ளத் தெரியாது என்று நினைத்தாயா காரிகன்?
டாக்டர் செவன் தூண்டில் புழு மட்டுமே! ஆனால்... நான் உருவாக்க இருக்கும் உலகில் டாக்டர் செவனின் மேதாவிலாஸத்திற்கு இடமுண்டு..!
உனது முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் அத்தனையையும் முறியடிக்க முடியும் என்ற தைரியத்தில் தூண்டில் புழுவை கவர்ந்திட வந்தேன்!
கார்லா!
ஐயம் சாரி காரிகன்...! உங்களை இங்கு கொண்டு வந்த கலத்தைப் பின் தொடர்ந்தேன். அப்போது இன்னொரு சப்மரைன் திடீரென்று தோன்றி என்னை மடக்கி விட்டது!


ஆயுதம் தாங்கிய என்னுடைய நீர் மூழ்கிகளுக்கு உங்கள் கடல் ஆராய்ச்சிக் கலன்கள் ஒருபோதும் இணையாகாது! பிரபல விஞ்ஞானியான டாக்டர் கார்லா என் மண்டலத்திற்கு வந்துள்ளது எனக்குப் பெருமை சேர்க்கிறது!
விஞ்ஞானிகளைச் சேகரிப்பது உனக்கு பொழுது போக்கா நெப்டியூன்?
இப்போதுள்ள இந்த உலகத்தை அழித்து விட்டு புதிய, அப்பழுக்கற்ற உலகம் ஒன்றை நிர்மாணிக்க விஞ்ஞானிகள் தேவையே காரிகன்..!
இரண்டாம் தர சினிமாக்களில் வரும் வில்லன்களைப் போல ''உலகையே அழிக்கப் போகிறேன்'' என்று நீயும் ஆரம்பித்து விட்டாயா நெப்டியூன்? சுருக்கமாகச் சொல்கிறேன் கேட்டுக் கொள்! - நீ ஒரு கிறுக்கன்!
உன்னைச் சுற்றிலும் பார் காரிகன்! நான் சாதித்துள்ளவைகளைப் பார்..! அப்புறம் புரியும் - நான் சொல்வதை செயலாக்கிக் காட்டக் கூடிய திறமை கொண்டவன் என்று.


மாசு படிந்த நம் உலகைத் தவிடு பொடியாக்கி விட்ட பிறகு...
...கச்சிதமாக எனது ஆழ்கடல் சாம்ராஜ்யம் மட்டுமே செழித்து ஓங்கி நிற்கும்! என் திறமையில் உனக்குச் சந்தேகம் தேவையில்லை காரிகன்!
நீ ஆற்றல் மிக்கவனாக யிருக்கலாம் - ஆனால் அந்த ஆற்றலைக் கொண்டு உலகை அழிக்க நினைப்பது பைத்தியக்காரத்தனம் நெப்டியூன்!
உன்னைப் போன்ற சாமான்யர்களுக்கு அது பைத்தியக்காரத் தனமாகத் தோன்றலாம்!
நிலம் - நீர் - காற்று என்ற உலகின் மூன்று மண்டலங்களில், நிலத்தை கிட்டத்தட்ட முழுவதையும் ஆக்கிர மித்து விட்டது மனித குலம்! ஆக்கிர மித்தது மட்டுமல்லாமல், அதை நாசம் பண்ணவும் ஆரம்பித்து விட்டது!


"மனிதன் தொடர்ந்து இப்படியே நடந்து கொண்டிருந்தால் சமுத்திரத்தையும் காப்பாற்ற முடியாமல் போய் விடும்!"
"அதனால் நிலத்திலுள்ள அத்தனையையும் அழித்து நீர் மண்டலத்தைச் செழிக்கச் செய்யப் போகிறேன்!"
மனிதன் ஏற்படுத்தியுள்ள குழப்பங்களைத் தீர்த்திட இது ஒன்றே வழி!
ஆக, கடலைக் கொண்டே நிலத்தை அழிக்கப் போகிறாய்! அப்படித்தானே?
"என்னுடைய புதிய உலகிற்கு ஏராளமான விஞ்ஞானிகளைக் கடத்தி வந்ததுடன், இப்போதுள்ள உலகை அழிக்கத் தேவையான அணுசக்திப் பொருட்களையும் கொண்டு வந்து விட்டேன்...
"... உலக வரலாற்றிலேயே மிகப் பெரிய அணுகுண்டு ஒன்றை வெடிக்கச் செய்ய அது போதும்!"
"குண்டு வெடிப்பு சுழலும் பூமியை அதன் அச்சிலிருந்து நிலைமாறச் செய்யும்! ராட்சஸ கடல் அலைகள் எழும்பி எல்லாக் கண்டங்களையும் நிர்மூலமாக்கி விடும்!"


நிலத்தில் எந்த வகை உயிரினமும் எஞ்சி இருக்காது!
கடலுக்கு அடியில் இருக்கும் உன் னுடைய நகரத்தைத் தவிர...
இதிலிருந்து புதியதொரு உலகம் வளரும் காரிகன்! என்னுடைய உலகம்...
"... நெப்டியூனின் சாம்ராஜ்யம்!"
பழைய உலகைக் காப்பாற்றுவதில் தீவிரமாகயிருக்கும், உன்னைப் போன்றவர்களுக்கு எனது உலகில் இடமில்லை!
வெல்டன்!
டாக்டர் செவன்! நாக் அவுட் வாயுவின் பிடியிலிருந்து நீங்கள் மீண்டு விட்டீர்களா?
ஓ. யெஸ்..! இது வரை நான் பார்த்ததும், கேட்டதும் என்னைத் திகைக்கச் செய்து விட்டன மிஸ்டர் நெப்டியூன்!
விஞ்ஞானத்திலும் சரி - குற்றவியலிலும் சரி - பெரிய மேதை என்று பெயர் வாங்கியவன் நான்! ஆனால் நீயோ என்னை விடக் கில்லாடி என்பது புரிகிறது மிஸ்டர் நெப்டியூன்! நான் கனவில் கூடக் கண்டிராததொரு மாபெரும் திட்டத்தை நீ உருவாக்கியுள்ளாய்!


உன் புதிய உலகில் சேர்வதற்கு முன் ஒரே ஒரு நிபந்தனை! என்னுடைய நீண்ட கால விரோதியான பிலிப் காரிகனை என்னிடம் விட்டு விடு ......!
...என் கையால் அவன் சாக வேண்டும்!
உங்கள் வருகையினால் நம் - யார் பெரியவன் என்ற மோதல வரும் என எதிர்பார்த்தேன், டாக்டர் செவன்..!
சரி சமமான இருவருக்கிடையே மோதல் வர வாய்ப்புண்டு மிஸ்டர் நெப்டியூன்! இதுவரை நான் பார்த்த வற்றிலிருந்து...
...நீ என்னை விடப் பெரிய ஆள் என்பது தெரிகிறது?
அப்படியானால், உங்கள் கோரிக்கையை ஏற்காமலிருப்பது முட்டாள்தனம்..! இனி காரிகன் உங்கள் கையில்!
டாக்டர் செவன், உங்களைப் போன்ற அறிவாளிகள் என்னுடைய தலைமையை ஏற்கத் தயாராக இருப்பது குறித்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன்...!


..னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள்!
நோ!
கவலைப்படாதே கார்லா! என்னைக் கொல்லும் முயற்சியில் எத்தனையோ முறை டாக்டர் தோல்வி கண்டிருக்கிறார்!
ஆனால் இந்த முறை உன் சாவு நிச்சயம்! வெறும் கையாலேயே உன்னைக் கொல்லப் போகிறேன்!
டாக்டர் செவன், காரிகனுடன் நேரடி மோதலில் இறங்குவீர்கள் என நான் நினைக்கவில்லை!
அப்படிச் செய்யா விட்டால் எனக்குத் திருப்தி இருக்காது, மிஸ்டர் நெப்டியூன்!
..நாங்கள் நீண்ட கால எதிரிகள்! இப்போதைக்கு எனக்குத் தேவை எல்லாம் சண்டை போட ஒரு அரங்கம் மட்டுமே!
ரொம்ப நல்லது!. அந்த நீள வராண்டாவின் கடைசியில் நீங்கள் மோதலாம்!
...ஆனால் நடப்பது அத்தனையும் கண்காணிக்கப்படும்! உங்களைப் போன்ற விஞ்ஞானிக்கு எதுவும் ஆகிவிடக்கூடாது!



நேரடி மோதலுக்கு காரிகனும் டாக்டர் செவனும் ஆயுத்தமாயினர்!
பெரிய தவறு செய்து விட்டாய் டாக்டர்! கப்பலில் கிடைத்தது போல மீண்டும் ஒரு வாய்ப்பு கிடையாது!
நான் சொல்வதைக் கவனமாக கேள்! இதில் ஏமாற்று வேலையோ மோசடியோ கிடையாது! நம் காலடி ஏற்படுத்தும் ஓசையில் நாம் பேசுவது நெப்டியூனுக்கு கேட்காது! வராண்டாவின் கடைசியை அடைவதற்குள் சொல்வதைக் கேட்டுக் கொள்...!
... நடக்க விருக்கும் இந்தச் சண்டையில் நீ தோற்க வேண்டியது இன்றியமையாதது... உன்னுடைய உயிரும் போயாக வேண்டும்!
டாக்டர் செவனின் முணுமுணுப்பில் ஒரு திடுக்கிடும் தகவல் வந்தது...
நீ ஒரு இக்கட்டான நிலையில் இருக் கிறாய் காரிகன்! பரம எதிரியான என் மீது நம்பிக்கை வைக்க வேண்டிய சூழ்நிலை!
..நெப்டியூனின் பைத்தியக்காரத்தனம் உலகையும், உலக மக்களையும் அழித்து விடும். ஆனால் என்னுடைய வெறியோ அந்த இரண்டையும் ஆள வேண்டும் என்பது தான்...
அவனைத் தடுக்க ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறாயா?


யெஸ்! உன்னுடைய சாவிலிருந்து அது தொடங்குகிறது!
டாக்டர் செவனும், காரிகனும் அரங்கத்தை அடைந்து விட்டனர்! அவர்களது மோதலை நீ பார்க்க மறுப்பதில் அர்த்தமில்லை..! பார்க்காமல் இருப்பதால் முடிவில் மாற்றம் இருக்கப் போவதில்லை...!
உன்னுடைய தோஸ்த் நிச்சயம் தோற்பான்...!
டாக்டர் செவனை தோற்க விட மாட்டேன்!


ஆக்ரோஷமான மோதல் துவங்கியது!
கும்!
மிஸ்டர் நெப்டியூன் கவனமாக கண் காணித்துக் கொண்டிருந்தான்!
பசங்களா! தயாராக இருங்கள்... டாக்டர் தோற்றுப் போகும் நிலை ஏற்பட்டால், உள்ளே புகுந்து நீங்களே காரிகனை தீர்த்துக் கட்டுங்கள்!
கார்லாவும் வேறு வழியில்லாமல் மோதலைப் பார்த்தான்...
காரிகனின் கை ஓங்கியுள்ளது!
..ஆனால்... திடீரென்று
கும்!


சண்டையின் போக்கு மாறியது!
நோ!.. நோ! ஏதாவது செய்யுங்கள்... காரிகன்! உதைத்துத் தள்ளுங்கள்..!
குட்! டாக்டர் மரணப் பிடிபிடித்து விட்டார் மிஸ் கார்லா...
..பிடி மேலும் மேலும் இறுகிட, வெறி படர்ந்த டாக்டரின் கண்கள் காரிகனின் கண்களை ஆழமாக நோக்கின!
டாக்டர் செவனின் குரூரக் கண் களிற்குக் கட்டுப்பட்ட காரிகனின் உடலில் படிப்படியாக எதிர்ப்பு குறைந்தது!


நோ... நோ...! அவர் சாகக் கூடாது... சாகக் கூடாது...
நோ.. டாக்டர் கார்லா! உன் நண்பனை எமன் கவர்ந்து சென்று விட்டான்!
இருந்தாலும் அதை நானே நேரில் கண்டு உறுதி செய்யப் போகிறேன்! நெப்டியூனின் சாம்ராஜ்யத்தில் எவ்விதக் கவனக் குறைவிற்கும் இடம் கிடையாது!
மிஸ்டர் நெப்டியூன் சண்டை நடந்த இடத்திற்கு விரைந்து வந்தான்...
மூச்சு இல்லையே...! இதயத் துடிப்போ நாடித்துடிப்போ இல்லை..! வென்று விட்டீர்கள் டாக்டர் செவன்..!
சபாஷ்! ஒரு நெடுநாள் எதிரியை உங்கள் கரங்களிலேயே கொன்று விட்டீர்கள்!
பழைய கணக்கைத் தீர்த்து விட்டேன்... இனி உன் திட்டங் களில் முழுமூச்சாக ஈடுபடுவேன்!
பசங்களா! நீர் அழுத்த துவாரத்தைத் திறந்து காரிகனை மீன்களுக்கு இரையாக்குங்கள்!



நி-நிஜமாகவே காரிகன்..?
இறுதிவரை காரிகன் ஒரு வலிமையான எதி ரியாகவே இருந்தான்!
உன்னையும், நெப்டி யூனையும் பழி வாங்காமல் நான் ஓயமாட்டேன்!
நாடக வசனம் பேசுகிறீர்கள் மிஸ் கார்லா! நிலப் பகுதி முழுவதையும் கடல் கபளீகரம் செய்யும் போது இந்த சாம்ராஜ்யம் மட்டுமே எஞ்சி இருக்கும்...
அப்போது தெரியும் எங்கள் வலிமையைப் பற்றி?
ஆ! அந்த வெளிச்சம் தெரிகிறதா? உன்னுடைய நண்பரை கடலில் புதைக்க இப்போதுதான் துவாரத்தை திறந்துள்ளனர்!
கட்டுப்பாட்டு அறை எனக்கு இதை உறுதிப்படுத்துகிறது, மிஸ் கார்லா.. காரிகனின் சடலம் கடலுக்குள் தள்ளப் பட்டு விட்டது. அவனை மறந்து விட்டு...


டாக்டர் செவனைப் போல் நீயும், உனது விஞ்ஞான ஆற்றலை நெப்டியூனின் சாம்ராஜ்யத்தில் காட்டிடலாம்!
..விரைவில் பூமியில் நிற்கும் ஒரே நகரம் இதுவாகத் தான் இருக்கும்!
...இனியும் காரிகனுக்காக வருந்துவதில் அர்த்தமில்லை!
எனது சாம்ராஜ்யத்தில் அவனுக்கு இடம் இல்லை. ஆனால் உனக்கும் உனது விஞ்ஞானத் திறமைக்கும் இடமுண்டு!
என்ன செய்யப் போகிறாய்?
இது பற்றி நான் அவளுடன் பேசிக் கொள்கிறேன் மிஸ்டர் நெப்டியூன்...?
அதுவும் சரிதான், டாக்டர் செவன்.. பல முக்கிய வேலைகளை நான் கவனித்தாக வேண்டும்!


ப்டியூ ...ன் அறைக்குச் சென்ற உடன்...
அவன் கடைசியாகக் குறிப்பிட்ட தன் பொருளை நீ விளங்கிக் கொண்டாயா?
அவன் கடத்தி வந்த அணுசக்திப் பொருட்களை பயப்படுத்தத் தயாராகி விட்டான் என்று புரிகிறது!
அணுகுண்டு வெடிப்பால் பூமியின் அச்சு நிலைமாறும்... கடலில் ராட்சஸ அலைகள் உருவாகி நிலப்பரப்பை விழுங்கிவிடும்!
நிஜமாகவே வருத்தப் படுவது போலத் தெரிகிறதே- டாக்டர் செவன்! நான் வேறு விதமாக...
தோற்றங்கள் ஏமாற்றும் மிஸ் கார்லா! உன்னுடைய நண்பன் பிலிப் காரிகன் செத்ததைப் போல!
விளக்கமாய் சொல்ல நேரமில்லை! நாம் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய உள்ளன!
டாக்டர் செவன் கார்லாவை இழுத்துக் கொண்டு நெப்டியூனின் ஆழ்கடல் நகருக்குள் வேகமாக ஓடினார்...!
டாக்டர் செவன்! காரிகன் உயிருடன் இருக்கிறாரா?! எனக்கு இப்போதே தெரிந்தாக வேண்டும்!
நல்லதே நடக்கும் என்று எண்ணி செயல் படுவோம்...?
ஹிப்னட்டிஸ முறையில், யாரும் கண்டு பிடிக்க முடியாத அளவிற்கு உயிர் நாடியை இறக்கிடும் புதிய வித்தையை நான் கண்டு பிடித்துள்ளேன்!
அதைப் பயன்படுத்தி சண்டையின் போது காரிகனை மஹே வசியப் பிடியில் கட்டினேன்...!


ஆனால்... காரிகனின் உடல் கடலில் வீசப்பட்டு விட்டதாக மிஸ்டர் நெப்டியூனின் கருவிகள் சொன்னதே! அதுவும் இவ்வளவு ஆழத்தில்..
நான் ஏற்கனவே சொன்னபடி, அவன் உயிரோடிருக்கிறான் என்ற தியரியின் அடிப்படையில் செயல்படுவோம்..!
காரிகனை லேசான வசியத்தில் ஆழ்த்தினேன் மிஸ் கார்லா..! நிச்சயம் அதிலிருந்து விடுபட்டு எழுந்திருப்பான்!
அப்படியானால் கடலில் வீசப்பட்டது யாரது சடலம்?
காரிகனை கடலில் தூக்கி எறிய யாரை ஏவியிருப்பார்களோ - அவனது சடலமாகயிருக்கலாம் என்றே நம்பு கிறேன். ஓ! அதோ இருக்கிறது நமது இலக்கு...
துவாரங்களைத் திறக்கும் முனைகள் இதோ உள்ளன! இங்கே ஏதாவது கலாட்டா செய்து நெப்டியூனின் கவனத்தை திசை திருப்ப வேண்டும்!
கவனத்தைத் திருப்பவா...?!
நீர் மூழ்கிக் கலம் தயாராக உள்ளது மிஸ்டர் நெப்டியூன்! தேவையான எல்லாப் பொருட்களும் அதில் ஏற்கனவே ஏற்றப்பட்டுவிட்டன!
இது வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்ச்சி ஜென்டில் மென்! கடைசி சரக்கை ஏற்றி முடித்த பின்பு... பூம்!


திடீரென்று எச்சரிக்கை அலாரம் நகர் முழுக்க ஒலித்தது!
மேற்கூரையில் அபாயகரமான நீர்க் கசிவு ஏற்பட்டுள்ளது! தண்ணீரின் அழுத்தம் அதிகரித்து நகரம் சிதறும் முன்பு கசிவு ஏற்பட்டிருக்கும் இடத்தை தேடிக் கண்டு பிடியுங்கள்!
ஆழ் கடல் நகரில் கொந்தளிப்பு!
அனாதையாக விட்டுச் செல்லப்பட்ட படகுத் துறையில்...


அனைவரின் கவனமும் திசை திரும்பி யிருந்ததால் அந்த உருவம் சுதந்திரமாக நடமாட முடிந்தது!
அது வேறு யாரும் அல்ல - காரிகன்தான்!
டாக்டர் செவன் இவர்கள் கவனத்தை திசை திருப்புவதாக உறுதி யளித்தான்...! அது இது தான் என்று புரிகிறது!
செத்தவன் போன்ற நடிப்பைக் கைவிட வேண்டிய நேரம் வந்து விட்டது! நெப்டியூன் அணுகுண்டை பயன்படுத்துவதற்கு முன் அவனை மடக்கியாக வேண்டும்!
மேற்கூரைக்கு என்ன நேர்ந்தது? திட் டத்தின் க்ளைமாக்ஸ் நெருங்கும் இந்த வேளையில் இது என்ன சோதனை?
கடல் நீர் உள்ளே புகும் துவாரங்கள் திறக்கப்பட்டுள்ளன மிஸ்டர் நெப்டியூன்!
செக்யூரிட்டியிலிருந்து கிடைத்த தகவல்படி... டாக்டர் செவனும் அந்த கார்லா பொம்பளையும் தான் இதற்குக் காரணமாம்!
அதனால்தான் அவன் என்னுடைய தலைமையை மறுப்பின்றி ஏற்றுக் கொண்டானுக்கும்!


அவர்களைத் தேடுவதில் நேரத்தை வீணாக்காதீர்கள்! நீர்மூழ்கிக்கு வாருங்கள்! க்விக்!
இது நம்மைத் திசை திருப்பும் முயற்சி!
என்னுடைய தலைமையை ஏற்பதாக டாக்டர் செவன் கூறியது பொய் என்றால்... காரிகன் இறந்ததும் பொய்தான் என்றாகிறது!
காரிகன் இன்னமும் உயிரோடு இருந்தால் நமது திட்டத்தைக் கெடுக்க சதி செய்வான்!
நீர்மூழ்கிக் கப்பலில் உள்ள அணு குண்டுகளை வெளியேற்ற நிறைய நேரம் பிடிக்கும்...! அதற்குள் அவனை நசுக்கி விடுவோம்..!
அங்கே பாருங்கள்!
காரிகனே தான்! நாம் வரும் சப்தத்தை கேட்டிருப்பான்!
காரிகன் நீருக்குள் குதித்து விட்டானே... இப்போது என்ன செய்வது?
போய்த் தொலையட்டும்! கப்பலில் உள்ள அணுகுண்டுகளை அகற்றிட அவனுக்கு அவகாசம் கிட்டியிருக்காது!


அது மட்டுமல்ல:.. அணுகுண்டுகளை வெடிக்கச் செய்த பிறகு -
அவன் எங்கே தப்ப முடியும்?
இதற்கிடையில் காரிகன் மீண்டும் தண்ணீருக்கு மேலே வந்தார்!
கார்லாவின் நீர்மூழ்கி அதோ உள்ளது! டாக்டர் செவனும் கார்லாவும் விரைவில் என்னுடன் சேர்ந்து விட்டால்.. அவர்களை ஒரு கை பார்த்து விடலாம்!
அப்போது -
கார்லா! டாக்டர் செவன்! கமான்! நெப்டியூனின் நீர்மூழ்கிக் கலத்தைப் பின் தொடர்வோம்!
அதைத் தொடர்ந்து -
காரிகன்! அவனது அணுகுண்டுகளை செயலிழக்கும்படி செய்ய நீ தவறி விட்டது போல் அல்லவா தெரிகிறது!
அதைச் செய்வதற்குப் பல தடைகள் இருந்தன டாக்டர்..
அப்படியானல், ஆயுத மில்லாமல் இந்தக் கலத்தைக் கொண்டு எந்த நம்பிக்கையில் அவர்களைப் பின் தொடரச் சொல்கிறாய்?


நெப்டியூனின் போர்க் கப்பலுக்கு முன் இது டப்பா போன்றது!
முழு அளவில் மாலுமிகள் இல்லாத நிலையில் வேறு எந்தக் கப்பலைப் பயன்படுத்துவதாம் செவன்?
நெப்டியூனின் கலம் ஆழ் கடல் நகரி லிருந்து வெளியேறியது-
காரிகனும் விடாது விரட்டினார்...!
இது பைத்தியக்காரத் தனம் காரிகன்!
நீ எவ்வளவு வன்மையான எதிரியாக இருந்தாயோ - அதே அளவிற்கு உதவியாகவும் இருந்திருக்கிறாய்! இப்போது நம்பிக்கை இழந்து அதைக் கெடுத்து விடாதே!


இந்தக் கலத்தைக் கொண்டு நெப்டி யூனைத் தடுத்து நிறுத்த முடியா  து தான்! ஆனால் நெப்டியூனின் பீரங்கி களுக்கு சரியான இலக்காக இருக்க முடியும்!
மிஸ்டர் நெப்டியூன்! ஆழ்கடல் நகரிலி ருந்து கார்லாவின் நீர்மூழ்கிக் கப்பல் மூலம் நம்மைப் பின் தொடர்கிறார்கள்!
அந்த தகர டப்பாவை வைத்து- நமது முயற்சியைத் தோற்கடிக்க நினைக்கிறார்கள்...
இந்த லட்சணத்தில் அந்த ஏஜெண்ட் என்னைப் பைத்தியம் என்று சொன்னான்!
பீரங்கியில் குண்டுகளை நிரப்புங்கள்! மடையன்களைத் தவிடு பொடியாக்குவோம்!
சுட்டுத் தள்ளுங்கள்!
சுடுங்கள் முட்டாள்களே! காரிகனும் அவனது நண்பர்களும் கண் முன்னால் தான் இருக்கிறார்களே!
நா - நாங்கள் சுட்.. சுட்டோம் மிஸ்டர் நெப்டியூன்! .. பீரங்கியில் குண்டுகள் உள்ளது. ஆ - ஆனால்.. குழாயி லிருந்து அவை வெளியேறவில்லை!



ஏ.. என்ன? அவை வெடிக்கு முன் ஏதாவது செய்து தொலைங்கள்.
பீரங்கிகள் வெடித்துச் சிதறியதில் நெப்டியூனின் கலம் சின்னா பின்னமானது!
அதில் ஏற்றப்பட்டிருந்த அணுகுண்டுகளோடு கடலின் ஆழத்திற்குப் போய் விழுந்தது!
..உடனே கார்லாவின் சப்மரைன் மேல் மட்டத்திற்கு வந்தது!
காரிகன்..! எ-என்ன நடந்தது?
நெப்டியூனின் நீர்மூழ்கிக் கப்பலில் ஏற்றப்பட்டிருந்த அணுகுண்டுகளை அகற்ற அவகாசம் இல்லை என்பது புரிந்த உடனே...
...நான் அவர்களுடைய பீரங்கியில் நாசவேலை செய்தேன் கார்லா!
கெட்டிக்காரத்தனமாக காரியம் செய்தாய் காரிகன்..! ஆனால், இனி நெப்டியூனால் அபாயம் இல்லை- என்னும் போது நம்மை மீண்டும் எதிரிகளாக்குகிறது!
காரிகனும் கார்லாவும் திரும்பிப் பார்த்த போது -
டாக்டர் செவனைக் காணோம்!


நீர்மூழ்கிக் கப்பலின் பின் கதவு திறந்துள்ளது... தற்காலிக சண்டை நிறுத்தம் அதிகாரப் பூர்வமாக முடிவுக்கு வந்து விட்டது என டாக்டர் நினைத்து விட்டான் போலும்!
ஆ - ஆனால் ... நாம் கரைக்குப் பல மைல்களுக்கு அப்பால் அல்லவா இருக்கிறோம்!
இது போன்ற தடைகள் அவனை ஒரு போதும் கட்டுப் படுத்தியதில்லை கார்லா! இப்போது... நாம் வீடு திரும்புவோம்!
நிலப்பகுதி நோக்கிப் பயணத்தை துவக்கினார்கள்...
டாக்டர் செவன் தப்பி விட்டதில் உங்களுக்கு வருத்தமில்லையா காரிகன்...?
இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடாது கார்லா! அது மட்டு மல்ல - அவன் நமக்கு உதவியும் செய்துள்ளான் உலகைக் காப்பாற்றுவதில்...!
நிகழவிருந்த விபரீதங்களைக் கற்பனை பண்ணிப் பார்க்கும் போது டாக்டர் செவன் தப்பியது பெரிய விஷயமாகப் படவில்லை எனக்கு! இன்று இல்லாவிட்டாலும் என்றாவது டாக்டர் செவன் என்னிடம் சிக்கியே தீருவான்! அது உறுதி!
- முற்றும் -



பெருச்சாளிப் பட்டாளம்!
பிரிட்டனின் தொழில் முன்னேற்றத்தையும், யுத்த முயற்சிகளையும் முடக்கிப்போட நாஜி ஜெர்மனி ஒரு பவுண்டு கள்ள நோட்டுக்களை அச்சிட்டு பிரிட்டனில் விநியோகிக்க சதித்திட்டமிட்டி ருந்தது... பெருச் சாளிப் பட்டாளத்திற்கு மேலிடத்திலிருந்து
இரத்தினச் சுருக்கமாக வந்து சேர்ந்தது உத்திரவு- "... கள்ளநோட்டு அச்சடிக்கும் மாஸ்டர் பிளேட்டை அழிக்கவும் - அதற் காக என்ன விலை கொடுக்க நேர்ந்தாலும் சரி!"
அதையடுத்து - ஒரு தானியங்கி போக்கு ரத்து சமிக்ஞை விளக்கை கட்டுப்படுத் தும் விசையில் ஏதோ ஒரு விஷமம் புரிந்தன இரு கரங்கள்...!
சாலையில் நான்கு திசைகளிலும் பச்சை விளக்கு ஒளிர்ந்தது...
விளைந்தது விபரீதம்!


பயங்கர மோதல்...! ஓடி வாருங்கள் - உதவி செய்வோம்!
காவலாளிகளின் கவனத்தை திசை திருப்பியாயிற்று - வாருங்கள் நாம் உள்ளே புகுவோம்!
மேஜர் டக்கர்ட் முன்னால் நடந்தார்...
இந்தக் கட்டிடத்தில் தான் கள்ள நோட்டு அச்சடிக்கும் முயற்சி நடப்பதாக புலனாய்வு அறிக்கை தெரிவிக்கிறது... நாம் அழிக்க வேண்டிய மாஸ்டர் பிளேட்டும் இங்கே தான் இருக்கும்!
வழக்கமாக பணத்தை ஒரு மைல் தொலைவிலிருந்தே வாடை பிடித்துவிடுவேன்
நான். ஆனால் இங்கே கூடுதலாக கலோன் மாதிரி ஏதோ ஒரு நெடி வருகிறது!
யாரோ அன்னியர்கள் உள்ளே புகுந்து விட்டார்கள்...
வரட்டும்.. பாட்ம் புகட்டி அனுப்புவோம்
பெருச்சாளி பட்டாளம் தள அறையினுள் புகுந்தது...
பிரிண்டிங் மெஷின்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன - ஆனால் ஜெர்மானியர்கள் யாரையும் காணோமே!



நாங்கள் இங்கே இருக்கிறோம் தம்பிகளா... ஆயுதங்களை அப்படியே கீழே நழுவ விடுகிறீர்களா!
ஏய்... ஒல்லிப் பையா.. அந்த ஆயுதங்களைச் சேகரித்துக் கொண்டு வந்து என்னிடம் ஒப்படை!
அவன் சொல்கிறபடி செய்து தொலை... வீஸல்!
வேறு வழி...?
தேங்க் யூ... ஒல்லிப் பையா..! எனக்கு நீ இந்த உதவியை செய்ததால் முதல் நபராக பிரிண்டிங் மெஷினை நோக்கி நட..!
நோ.. நாங்கள் யுத்த கைதிகள்..! மிஸ்டர் டக்கார்ட் ஏதாவது செய்து என்னை காப்பாற்றுங்கள்!
சாவுக்கு பயந்தவன் ஏன் இவ்வளவு தூரம் வந்தாய்? உன் வீர மரணம் அடுத்து
உன் நண்பர்கள் பிரிண்டிங் மெஷினை நோக்கி நடக்க ஒரு தூண்டு கோலாக அமைய வேண்டும்... ம்.. நட
ஐயோ.. எ..என்னை... வி..விட்டு.. விடுங்கள்.
எங்களிடம் கருணையை நீ எதிர் பார்க்க முடியாது!


வீஸல் முரண்டு பண்ணிக் கொண்டிருந்த விஞ்டிகளில் -
பேப்பர் உருளைகள் - ராட்சஸ அளவில்! இவைகளை புரட்டி உருண்டோடச் செய்யத் தேவையான வலிமை ஒரு துருக்கிய னிடம் இல்லையா என்ன?
ஆயிற்று...! நான் இனி விலகி ஓடிப்போய் விட வேண்டும்!
ட்-டமால்!
க்ராஷ்!
ஆவ்வ்வ்..!
தூக்கி எறியப்பட்ட காவலாளி பிரிண்டிங் மெஷினுக்குள்ளே மாட்டிக் கொண்டான்.
தொலைகிறான்... விடு - வீர மரணம் என்பது எல்லோருக்கும் பொதுவான ஒரு கௌரவம் தானே!


க்ராஷ்!
மெஷினில் ஏற்பட்ட மின் தடை காரணமாக மின்சார சப்ளை துண்டிக்கப்பட்டு விட்டது. விளக்குகள் அனைத்தும் அணைந்து விட்டன..
இந்த கும்மிருட்டில் மாஸ்டர் பிளேட்டை எப்படி நாம் தேடிக் கண்டுபிடிப்பது டக்கார்ட்?
கலோன் நெடி... அதை வாடிக்கையாக பூசிக் கொள்ளும் நபர் யாரென்று எனக்கு ஞாபகம் வருகிறது!
நைஸாக தப்பியோடி விடத்தானே நாடக மாடுகிறாய் - இல்லையா?
இல்லை.. டான்சர்! நாற்றம் வாசல் பக்க மிருந்து வருகிறது- வா... காட்டுகிறேன்!
ஹேன்ஸ்! பித்தலாட்டக்காரன் ஹேன்ஸ் கெல்லர்! இவனை ரொம்ப காலமாக தெரியும்!..... கொலை செய்ய தயங்காத ஒரு பஞ்சமா பாதகன்!
பாராட்டுகளுக்கு நன்றி வீஸல்! அந்த டார்ச்சை இப்படிக் கொடுத்துவிட்டு மற்றவர்களோடு சேர்ந்து போய் சுவர் அருகே மண்டியிட்டு நில்.. டக்கார்ட்!
பெருச்சாளிப் பட்டாளத்தின் வீரப் பிரதாபங்களைப் பற்றி நிறையவே கேள்விப் பட்டிருக்கிறேன். தென் அமெரிக்காவில் நான் மேற்கொள்ள விருக்கும் அராஜகங் களுக்கு உங்களை மாதிரி ஆட்கள்தான் எனக்குத் தேவை - இன்றைக்கே நாம் கிளம்புகிறோம்!
சரியான தமாஷ் பேர் வழியாக இருப்பாய் போலிருக்கிறதே!


தமாஷா..? எது தமாஷ்? வர மறுத்தால் கொன்று குவித்துவிடு வேன்.. ஜாக்கிரதை! நாஜிகளோடு ஒட்டுறவு வைத்துக் கொண்டதில் நான் எதிர்பார்த்த பலா பலன் இல்லை...
தென் அமெரிக்காவில் இஷ்டத்துக்கு நான் தேட்டை போடலாம்!
பெருச்சாளிப் பட்டா ளத்தை நீ அழைத்துச் செல்வதானுல் என் பிணத்தின் மீது நீ நடந்து போனால்தான் சாத்தியமாகும் கெல்லர்!
உன் விருப்பம் அது வாஞல் நான் மறுக் கவா போகிறேன் - இந்தா...
டமீல்!
டக்கார்ட் போல் நாங்களும் முட்டாள் தனமாக உயிரை போக்கிக்கொள்ளத் தயாரில்லை ஹேன்ஸ்..! எப்போது புறப்பட வேண்டும் நாங்கள்?
ஆனுல் டக்கார்ட் செத்துவிட வில்லை...
கைவசம் ஆயுதம் எது வும் இல்லை... ஆனுல் வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்று சொல் வார்கள்!


ஸாரி கெல்லர்... உன் பல் உடைந்தால் நான் பொறுப்பில்லை.
ஆ..வ்வ்!
இவனோடு போக தீர் மானம் பண்ணியவர் கள் முன் வரலாம்..! சேர்த்து அனுப்பி வைக்கிறேன்- எமலோகத்திற்கு!
வேறு வழியின்றி மாஸ்டர் பிளேட்டை அவர்களிடம் ஒப் படைத்தான் கெல்லர்!
காவலாளிகள் வரு கிறார்கள் டக்கார்ட்... நம் வசம் இருப்பதோ ஒரே ஒரு துப்பாக்கி தான் - எப்படி சமாளிக்கப் போகிறோமோ?'
பெருச்சாளிப் பட்டா ளத்துக்கு தலைமை தாங்க ஆசைப்பட்ட ஹேன்ஸ் கில்லர் முன் னால் வழி நடத்திச் செல்லட்டும்
அறை வாசல் வழியாக கெல்லரை முன்னால் தள்ளி விட்டார்கள்...
என்னை சுட்டு விடா தீர்கள்... - ஆஆஆ!
..யாரது? என்ன காரியம் பண்ணி விட்டோம்..! இருட்டில் எதுவுமே தெரியவில்லையே!
போய் குனிந்து உற்றுப் பாருங்களடா கடா முண்டங்களா!


துப்பாக்கிகள் கிடைத்து விட்டன... தோட்டாக்களை செல விடுவதில் கஞ்சத் தனம் வேண்டாம்!
வெளியே - முற்றத்தில்...
நீங்கள் தப்பி வெளி யேற வாய்ப்பே இல்லை.. எல்லா வாசல்களையும் மூடி விட்டதோடு கட்டிடத் தையும் சூழ்ந்து கொண்டிருக்கிறோம்.. மரியாதையாக சரணடையுங்கள்!
இந்த ஏணி எங்கே இட்டுச் செல்லுமோ தெரியவில்லை...
பழுதடைந்த பழைய கடிகார கோபுர உச் சிக்கு வந்து விட்டிருக் கிறோம்... இங்கிருந்து எங்கேயும் நாம் போக முடியாது!
மிஸ்டர் டக்கார்ட்! இந்த உருவச் சிலை கள் மணி அடிக்கும் போது ஒரு வட்டத்தில் சுற்றி வரக் கூடியவை - பாதுகாப்பு கவசமாக இவை நம்மை காப் பாற்றக் கூடும்!
நாங்கள் இந்தச் சிலைகளின் பின்னால் ஒளிந்து கொள்கிறோம்... கடி காரத்தை மணி யடிக்கு மாறு வைத்து விட்டு நீயும் ஓடி வா!


அதோ இருக்கிறார்கள் - சுடுங்கள்!
டுமீல்!
டுமீல்!
பலமாக அதிர்கிறது - ஆனாலும் தாக்குப் பிடிக்கும்!
டுமீல்!
டுமீல்
உறுதியான உலோகச் சிலைகள் அவர்களை கவசமாக காத்து நிற் கின்றன - நாம் என்ன செய்வது?
டுமீல்!
கீழே ஒரு டிராம் வண்டி ஊர்ந்து சென்ற போது -
ம்ம்... குதியுங்கள் - எல்லோரும்!
நீ கொஞ்சம் ஒதுங்கிக் கொள் - ஓட்டும் பணியை நான் பார்த்துக் கொள்கிறேன்!
அவனை வெளி யேற்று ரோஜன்... நம் வண்டியில் வேறு பயணிகளுக்கு அனுமதியில்லை!


சாலையில் தடை எழுப்பியிருக்கிறார்கள்...! இருக்கட்டுமே நானொன்றும் நிறுத்துவதாக இல்லை! அனைவரும் படுத்துக் கொள்ளுங்கள்!
பட்-டமால்!
பயங்கர வளைவு -


இந்த வேகத்தில் போகும் போது சமாளித்து ஓட்டிச் செல்வது முடியவே முடியாத காரியம்!
அந்த மிதவையை நோக்கி நீந்துங்கள்... நம்மை மீட்டுச் செல்ல தொலைவில் தயாராக காத்து நிற்கும் நீர் மூழ்கி கப்பலை சென்றடைய இது உதவக் கூடும்!
பெருச்சாளிகளுக்கு ஏற்ற முடிவுதான் இது! விரைவிலேயே அவர் களுடைய பிணங்கள் அழுகி நாற்றமடித்துக் கொண்டு மிதக்கப் போவது நிச்சயம்!
ஆனால் -
விலகிப் போகிறார்கள்...! நாம் செத்துவிட்டோம் என்று அந்த மூடர்கள் முடிவு கட்டி விட்டார்கள் போலிருக்கிறது!
ஹூம்.. என்ன ஒரு பயங்கர அனுபவம்... - சிறைவாசமே சொர்க்கம் என்று தோன்றுகிறது எனக்கு!
முற்றும்.



# புக் - மார்கெட்

## தேவை!

1. டாக்டர் டக்டர்
2. எத்தனுக்கு எத்தன்
3. பாதாளப் போராட்டம்
4. கொலைப் படை
5. மீண்டும் ஸ்பைடர்
6. யார் அந்த மினி-ஸ்பைடர்?
7. யார் அந்த ஜூனியர் - ஆர்ச்சி?

மேற்கண்ட இதழ்களை வாங்கத் தயாராக இருப்பவர் :

S. மகேஷ்,
46/2, மேல் பாடி முதலி தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை - 34.

## தேவை!

1. சதுரங்க வெறியன்
2. புரட்சித் தலைவன் ஆர்ச்சி
3. ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி
4. சாகஸத் தலைவி
5. அதிரடிப் படை
6. தங்க வேட்டை
7. பாதாளப் போராட்டம்
8. அதிரடி வீரர் ஹெர்குலஸ்
9. எமனுக்கு எமன்
10. கோப்ரா தீவில் ஸ்பைடர்

தொடர்பு கொள்க :

V. சுரேஷ்,
7, காணியாளன் புதுத் தெரு,
வடசேரி,
நாகர்கோவில் - 629 001.

## தேவை!

*லயன்*

1. ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி
2. மிஸ்டர் ஜெட்
3. உலகப் போரில் ஆர்ச்சி
4. எத்தனுக்கு எத்தன்
5. நீதிக் காவலன் ஸ்பைடர்
6. புரட்சித் தலைவன் ஆர்ச்சி

*மினி லயன்*

7. அதிரடி மன்னன்
8. கோப்ரா தீவில் ஸ்பைடர்

தொடர்பு கொள்க :

N. சுரேஷ்,
5/103 A 28, காளியப்ப
செட்டியார் காலனி,
குமாரசாமி பட்டி (P.O.)
தர்மபுரி - 636 703.

## விற்பனைக்கு

**லயன்**

1. கத்தி முனையில் மாடஸ்டி
2. பழி வாங்கும் பொம்மை
3. ஆப்பிரிக்க சதி
4. மரணக் கோட்டை
5. மனித எரிமலை
6. மரணப் பணி

**திகில்**

7. இரத்தப் படலம் - I
8. சாவதற்கு நேரமில்லை
9. தவளை மனிதனின் முத்திரை
10. அப்பல்லோ படலம்

## தேவை!

**லயன்**

1. பளிங்குச் சிலை மர்மம்
2. காணாமல் போன கோடீஸ்வரர்
3. மர்ம முகமூடி
4. மர்மக் கோவில்
5. டிராகன் நகரம்
6. அதிரடிக் கணவாய்
7. லயன் சூப்பர் ஸ்பெஷல்
8. சிறு பிள்ளை விளையாட்டு
9. கோடை மலர் '86
10. மரண மாஸ்டர்



தொடர்பு கொள்க :

*ஜமீலா பீபி;*
அக்பர் வீதி, புறாத் தோப்பு,
கோட்டக்குப்பம்.



## தேவை!

**லயன்**

லக்கி லூக் காமிக்ஸ்கள்
அத்தனையும் தேவை.

நமது லக்கி லூக் நண்பர்கள்
தொடர்பு கொள்ளவும் :

Rt. *அய்யாசாமி,*
வடிவேல் காம்பவுண்ட்,
பைபாஸ் ரோடு, கரூர் - 636 903.



## தேவை!

*மினி லயன்*

1. விசித்திர ஜோடி
2. வெள்ளைப் பிசாசு
3. ஒரு கள்ளப் பருந்தின் கதை
4. விண்வெளியில் ஒரு எலி
5. அந்தஸ்தைத் தேடி..!
6. நடுக்கடலில் எலிகள்
7. தென்னமெரிக்காவில் மாயாவி
8. கோப்ரா தீவில் ஸ்பைடர்
9. ஆர்டிக் நகரம்
10. விற்பனைக்கு ஒரு ஷெரீப்
11. எழுந்து வந்த எலும்புக்கூடு

தொடர்பு கொள்க:

செ. சங்கர்,
1/8, அக்ரஹாரம்,
பாணாம்பட்டு (P.O.)
விழுப்புரம் - 605 602.



## சந்தா விபரம்

*(லயன் காமிக்ஸ் மட்டும்)*

*ஓராண்டுச் சந்தா - ரூ. 50/=*
*அரையாண்டுச் சந்தா - ரூ. 30/=*

***M.O. அல்லது D/D அனுப்ப வேண்டிய முகவரி:***

*பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,*
*த. பெ. எண்: 374, சிவகாசி - 626 123.*

# இன்ஸ்பெக்டர் டேஞ்சரின் க்ரைம் க்விஸ் - (2)



பின் அட்டையிலுள்ள மினி மர்மத்திற்கான சரியான விடையை எழுதி அனுப்பக் கடைசித் தேதி : 31-12-93.

குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் 3 அதிர்ஷ்ட சாலி வாசகர்களுக்குப் பரிசு உண்டு! சரியான விடையும், பரிசு பெற்ற வாசகர்கள் விபரமும் பிப்ரவரி '94 இதழில் வெளிவரும்!

ஆசிரியர்.

## இன்ஸ்பெக்டர் டேஞ்சரின் க்ரைம் க்விஸ் - (1)

"பலி கேட்ட புதையல்" இதழின் பின்னட்டையில் வெளியான க்ரைம் க்விஸ் (1)க்கு ஏகப்பட்ட வாசகர்கள் விடை எழுதியனுப்பியிருந்தனர். ஆனால் சரியான விடையைக் கண்டுபிடித்த வாசகர்கள் இருவர் மட்டுமே! அவர்கள் -

1) D. புகழேந்தி
32-A, காந்தி நகர்,
செட்டியார்பட்டி (P.O.)
ராஜபாளையம் Via
Pin: 626 122

2) L. வெங்கடேஸ்வரன்,
C. அய்யம்பாளையம் (P.O.)
மண்ணச்சநல்லூர் (Via)
திருச்சி - 621 005.

இவர்கள் இருவருக்கும் ரூ. 75 மதிப்புள்ள Gift - set அனுப்பியுள்ளோம்! Congrats.

இனி சரியான விடையைப் பார்ப்போமா? "மானேஜர் மர்பியின் கூற்றுப்படி புதுமாடல் காரின் விசேஷ அம்சங்கள் அடங்கிய வீடியோ டேப் முழுமையாக ஓடி முடிந்த நிலையிலேயே மிஸ்டர் வில்ஸனால் திருடப்பட்டிருக்கிறது. (வீடியோவிலும் The End உள்ளது). ஆனாலும் வில்ஸன் சில நொடிகளிலேயே மடக்கப்பட்டு இன்ஸ்பெக்டரிடம் ஒப்படைக்கப்படுகிறார். அப்போது டேஞ்சர் வீடியோ படத்தை ஓட செய்த போது அது முதலில் இருந்து ஓடுகிறது. இதிலிருந்து மானேஜர் மர்பி வில்சனுடன் வீடியோவை பார்த்து முடித்ததாக சொன்னது பொய் என்றும் அவர் குற்றவாளி என்று தெரிகிறது!"


கதை:1. விச்சு இல் கிச்சு
இந்த வாரம் பார்த்தா டிமோட துணியெல்லாம் சலவை பண்ற வேலை என் னிடம் வந்து சேரும்....? சே... எல்லாம் என் நேரம்!
பாவம் கிச்சு!
கோயான் ஏஜென்சி
புதிய வாஷிங் மெஷின் ரூ. 5555 மட்டுமே
FREE DEMONSTRATION
ஹேய்... கிச்சு... ஓசியாக வாஷிங் மிஷினை 'டிரயல்' பார்க்கலாமாம்! உன் பிரச்சனை தீர்ந்தது போ!
கடையினுள்-
சூப்பர் ஐடியா விச்சு!
இதோ... தண்ணீர் விட்டாச்சு... சோப் பவுடரும் போட்டாச்சு... அழுக்குத் துணிகளைப் போட வேண்டியது தான் உங்கள் வேலை!
போட்டால் போச்சு!
அடச் சே... என் கடை முழு வதையும் நாசம் பண்ணி விட்டீர்களே... சுத்தமாக துடைத்து எடுங்கள்!
சுத்தம் பண்ணாமல் எங் காவது ஓட நினைத்தீர் களானால் உங்களைத் தூக்கி வாஷிங் மிஷினுக்குள் போட்டு விடுவேன்!
விச்சு... எனக்காகப் பரி தாபப்படுவதை தயவு செய்து விட்டு விடு!


கதை:2. விச்சு&கிச்சு
கிச்சு... ஆட்டத்தின் ஓய்வுப் பகுதியின் போது சாப்பிட ஆரஞ்சுப் பழம் வாங்கி விட்டாயா?
இந்தத் தடவை நீயல்லவா ஆரஞ்சு வாங்க வேண்டும்?
இல்லை கிச்சு... இது உன்னோட முறை!
என்னப்பா பெரிய பேஜாரா இருக்கு! கோல்கீப்பராக நிற்கும் போது
ஆரஞ்சு வாங்க வேண்டியது யாருடைய பொறுப்பு என்பதை யோசித்துப் பார்க்கிறேன்!
பிறகு-
ஹேய் கிச்சு... மச மசன்னு நிற்காமல் ஓடு... பந்து வருது பார்!
விச்சு... அடுத்து கோபு... அப்புறம் நானு?
டேய் கஸ்மாலம்...!
ஐயையோ!
கெட்டது குடி!
இந்தத் தூங்கு மூஞ்சிப் பயலுக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுக்கணும் பசங்களா!
அம்மாடி....
எட்டப்பா!
கிச்சு ஒழிக!
கோமாளி கிச்சு!
உனக்கென்னப்பா கிச்சு... கொடுத்து வச்சவன்! கைகாசு போட்டு பழம் வாங்கா விட்டால் கூட உன்னைத் தேடி பழம் வந்துடுதே...!

## பத்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி!



**S. V. A. K. புஷ்பவல்லி**

*மறைந்த நாள் : 6-12-83*

— லயன் காமிக்ஸ் —

அடுத்த வெளியீடு!

# முகமில்லா மாயாவி!




பிளஸ் ஒரு கலர் இணைப்பு!


எதிரிக்கு எதிரி!
லயன்
காமிக்ஸ்
ரூ-3·50